**O.S.No. 306/2021**

**Date 01.07.2025**

**வா.சா.2 சண்முகத்தாய்**

பிரதிவாதி தரப்பில் **குறுக்கு விசாரணை**

வா.சா.1 கனகராஜிற்கு எனது மகளை திருமணம் முடித்துகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் வீரபாண்டி தேவர் இறக்கும் போது எனக்கு வயது 10 ஆகும். எனது மூத்த அண்ணன் கிருஷ்ணசாமி தேவருர் என்னை விட 50 வயது மூத்தவர். எனது தம்பி கருப்பசாமி பாண்டியன் என்னைவிட 5 வயது இளையவர். எனது அண்ணன் தாவாசொத்தை கிரையம் பெற்றதை நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது அண்ணன் மாட்டு வியாபாரம் மற்றும் விவசாயம் பார்த்து வந்தார். மேற்படி எனது அண்ணன் தாவா சொத்தை எந்தஆண்டு வாங்கினார் என்று என்னால் கூறஇயலாது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு எனது திருமணம் ஆகும் வரை நானும் என் அண்ணனும் ஒன்றாக இருந்தோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு எனது அண்ணன் தான் அனைத்து வரவு செலவுகளை பார்த்து வந்தார். நகை நட்டு போட்டு எனக்கு திருமணம் செய்து கொடுத்தது எனது அண்ணன் தான். எனக்கு திருமணம் ஆகி 10 ஆண்டுகளுக்கு பிறகு எனது தம்பிக்கு திருமணம் ஆனது. எனது தம்பி திருமணம் ஆகி எந்த வீட்டில் குடியிருந்தார் என்றால் முதலில் பூர்வீக வீட்டில் இருந்தார். பின்பு எனது அண்ணன் கட்டிய வீட்டில் குடியிருந்து வருகிறார். மேற்படி பூர்வீக வீடு யார் கைவசம் உள்ளது என்றால் இருவருக்கும் கூட்டாக உள்ளது. தாவாசொத்து கூட்டுகுடும்பமாக இருந்த போது வாங்கிய சொத்து என்றாலும் பாகம் பிரித்து கொடுத்த வீட்டில் தான் எனது தம்பி இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது அண்ணன் எப்போது வீடு கட்டினார் என்று எனக்கு தெரியாது.

எனது அண்ணன் குடும்பத்தோடு நான் சம்பந்தம் செய்ததால் நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**